சி.சி 59/2020 தேதி 28.12.2021

பு.சா. 1 விமலன்

எதிரி தரப்பில் கு.வி.,மு.ச 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில்

குறுக்கு விசாரணை

நான் 21 வருடங்களாக வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். 211/2001 என்னுடைய பதிவு எண் ஆகும். நான் தற்போது வரை நாகர்கோவில் வழக்கறிஞர் சங்கத்தில் உறுப்பினராக இருந்து வருகிறேன். நீங்கள் சொல்வது போல் தற்போது வரை நாகர்கோவில் சங்கத்தில் உறுப்பினராக இருந்து வரவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் நாகர்கோவில் வழக்கறிஞர் சங்கத்தில் சங்கத்தின் விதிகளுக்கு அப்பாற்பட்டு செயல்பட்டதால் அதிலிருந்து தற்காலிகமாக இடைநீக்கமாக செயல்பட்டீர்கள் என்றால் சரிதான். வழக்கறிஞர் சட்டத்திற்கு எதிராக செயல்படவில்லை. மேற்படி இடைநீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து வழக்கறிஞர் குழுமத்தில் மேல்முறையீடு செய்தீர்கள் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டை நீங்கள் திரும்ப பெற்றுக் கொண்டீர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரியை எத்தனை வருடங்களாக எந்த வகையில் பழக்கம் என்றால் இவ்வழக்கின் எதிரியின் மனைவி வழக்கறிஞர் அவர் என்னுடன் பணியாற்றியுள்ளார் அவ்வகையில் எதிரியை அவரது மனைவி மூலம் 15 வருடங்களாக தெரியும். மேற்படி எதிரி உங்களுக்கு தெரிந்து 15 வருடங்களாக அப்டா மார்கெட்டில் மொத்த வியாபார கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த வியாபார சம்மந்தமாக அடிக்கடி வெளியூர் சென்று விடுவார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. போகலாம். நீங்களும் எதிரியின் மனைவியும் வைத்திருந்த அலுவலகத்தின் கீழ் தான் எதிரியும் அவரது மனைவி மற்றும் குழந்தைகள் வசித்து வந்தார்கள் என்றால் 2017 முதல் 2020 வரை குடியிருந்து வந்தார்கள். மேற்படி எதிரி வியாபாரம் சம்பந்தமாக வெளியூருக்கு செல்லும் போது அவரது மனைவியிடம் எதிரி பெயரில் உள்ள காசோலையில் நிரப்பப்படாமல் கையெழுத்து செய்து கொடுத்து செல்வது வழக்கம் என்றால் மேற்படி மூன்று வருடங்களில் (2017–2020) எதிரி எந்த வேலைக்கும் செல்வது இல்லை வீட்டில் தான் இருந்தார். நீங்கள் வழக்கிற்காக பொய் சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல. 2020 மார்ச் கொரோனா காலத்திற்கு பின்பு தான் எதிரி வேலை இல்லாமல் வீட்டில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. 2020 ஜுன் அல்லது ஜுலை மாதம் வரை நான் அலுவலகம் வைத்திருக்கும் கீழ் தளத்தில் குடியிருந்து வந்தார். நீங்களும் எதிரியின் மனைவியும் ஒன்றாக தொழில் செய்து வந்த சமயத்தில் உங்கள் இருவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் தனியாக சென்றுவிட்டார் என்றால் சரிதான். ஜுன் 2020

காலகட்டத்தில் தனியாக சென்றுவிட்டார். அவ்வாறு எதிரியின் மனைவி அலுவலகத்தில் இருந்து சென்ற போது அவருடைய புத்தகங்கள் அவருடைய டைரி மேஜை மற்ற பொருட்களை விட்டு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல எதிரியின் மனைவி என்னுடைய அலுவலகத்தில் இருந்து சென்ற போது என்னுடைய 12 கேஸ் கட்டு மற்றும் சில ஆவணங்களை எடுத்து சென்றார். மேற்படி உங்கள் அலுவலகத்தில் இருந்து எடுத்து போனது குறித்து காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தீர்களா என்றால் இரணியல் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அது குற்ற எண் 585/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நீங்கள் கொடுத்த மனு பொருண்மை தவறு என்று முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல தற்போதும் நிலுவையில் தான் உள்ளது. நீங்கள் சொல்வது தவறு என்றும் மேற்படி குற்ற எண் பொருண்மை தவறு என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அது குறித்து நீதிமன்றத்தில் இருந்து தகவல் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி தங்களுடன் பணி செய்த போது சில காசோலைகளை எதிரி எதிரியின் கையொப்பம் மட்டும் போட்ட காசோலைகளை அவரது மனைவி வைத்திருந்த எட்டு காசோலைகளை காணாமல் போனது பற்றி உங்களிடம் கேட்ட போது உங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று எதிரியின் மனைவியிடம் சொன்னீர்கள் என்றால் சரியல்ல எதிரியும் அவருடைய மனைவியுமாக சேர்ந்து என்னிடம் பணம் வாங்கி காசோலை கொடுத்து ஏமாற்றியது போல பல நபர்களிடம் பணம் வாங்கி காசோலை கொடுத்து ஸ்டாப் பேமெண்ட் கொடுத்துள்ளார். நீங்கள் சொல்வது போல் பல நபர்கள் என்று சொல்வது உங்களுக்கு தெரிந்த நபர் என்றால் சரியல்ல. மேற்படி எட்டு காசோலைகள் காணாமல் போனது குறித்து எதிரியும் அவரது மனைவியும் சேர்ந்து 24.08.2019 அன்று வங்கிக்கு சென்று ஸ்டாப்பேமெண்ட் கொடுத்துள்ளார்கள் என்றால் ஸ்டாப்பேமெண்ட் கொடுத்துவிட்டு அதேகாசோலையை என்னிடம் கொடுத்தார்கள். எந்த அடிப்படை முகாந்திரமும் இல்லாமல் எதிரி மற்றும் எதிரி மனைவி மீது குற்றம் சுமத்துகிறீர்கள் என்றார் சரியல்ல நான் சொல்வது உண்மை. உங்களுக்கும் எதிரி மற்றும் எதிரியின் மனைவிக்கு உள்ள விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு காசோலையை பயன்படுத்தி பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்தது போல் உங்களுக்கு தெரிந்த நபர்களை வைத்து எதிரிமீது வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல நான் அவ்வாறு செய்யவில்லை. நீங்கள் வழக்கறிஞர் என்பதால் காசோலை வழக்கு நடத்துகிறீர்கள் என்றால் சரிதான். காசோலை வழக்கு மட்டுமல்ல அசல் வழக்கு மற்றும் குற்றவியல் வழக்கிற்கும் ஆஜராகி

வருகிறேன். காசோலை வழக்குகளில் மாற்றுமுறை ஆவண சட்டபடி வழக்கறிவிப்பு வழக்கின் அடிதளம் என்றால் சரிதான். பொதுவாக வழக்கின் வழக்கறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்பு வைத்து புகார் தயார் செய்யப்படும் என்றால் வழக்கறிவிப்பு மற்றும் வழக்காணவங்களை வைத்து தயார் செய்வோம் பதில் அறிவிப்பு தேவையில்லை. நீங்கள் அனுப்பிய பு.சா.ஆ.3 வழக்கறிவிப்பில் எதிரி 15.08.2019 அன்று உங்கள் வீட்டிற்கு வந்து பணம் கேட்டதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி பணத்தை 16.08.2019 அன்று கொடுத்தாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். பணம் நான் கொடுத்த போது எதிரி மற்றும் அவருடைய மனைவி உடனிருந்தார்கள். சாட்சி மீண்டும் தானே கூறுகிறார் பணத்தை நான் எதிரியின் வங்கி கணக்கிற்கு செலுத்தினேன் பணம் கேட்ட போது எதிரியும் அவரது மனைவியும் வந்தார்கள். நீங்கள் அனுப்பிய வழக்கறிவிப்பு பு.சா.ஆ.3 வழக்கறிவிப்பில் எதிரியும் அவரது மனைவியும் சேர்ந்து வந்து வாங்கினார்கள் என்று சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்ல வேண்டிய அவசியமில்லை சொல்லவில்லை. நீங்கள் சொன்ன தேதியன்று எதிரியின் வங்கி கணக்கில் எந்த பணமும் செலுத்தவில்லை என்றால் சரிதான். எதிரியின் மகளின் கல்லூரி வங்கி கணக்கில் செலுத்தியுள்ளேன். நீங்கள் மேற்படி எதிரியின் மகளின் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தியதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் எதிரியின் மனைவியுடன் சேர்ந்து வழக்கறிஞர் தொழில் செய்ததால் நட்பின் அடிப்படையில் எதிரியின் மனைவி உங்களிடம் கொடுத்து எதிரியின் மகளின் வங்கி கணக்கில் செலுத்தினார் என்றால் சரியல்ல. நீங்கள் அனுப்பிய பு.சா.ஆ.3 வழக்கறிவிப்பில் 3,13,400 என்று குறிப்பிட்டுள்ளீர்கள் அது தவறு மேற்படி எதிரியின் மனைவி உங்களிடம் கொடுத்து நீங்கள் எதிரியின் மகளின் வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்ட தொகை ரூபாய் 3,13,403/- என்றால் தொகை குறித்து தற்போது எனக்கு ஞாபகம் இல்லை எதிரியின் மனைவி என்னிடம் எந்த பணமும் தரவில்லை. வங்கி கணக்கு பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக யாருடைய வங்கி கணக்கிலும் யாரும் பணம் செலுத்தலாம் என்றால் சரிதான். நீங்கள் எதிரியின் மகள் கணக்கிற்கு எதிரியின் மனைவி தந்த பணத்தை தான் அனுப்பினீர்கள் என்றால் சரியல்ல என்னுடைய ஐ.சி.ஐ.சி.ஐ நாகர்கோவில் கிளையில் பணம் பரிமாற்றம் செய்வதற்கு பல மாதங்களுக்கு இருந்த பணத்தையும், எஸ்.பி.ஐ திங்கள் நகரில் உள்ள என்னுடைய கணக்கிலிருந்தத பணத்தை ஐ.சி.ஐ.சி.ஐ நாகர்கோவில் கிளைக்கு மாற்றம் செய்து அதை எதிரியின் மகளின் வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்தேன். (எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக நேரமின்மையின் காரணமாக ஒத்தி வைக்கப்படுகிறது. )